# இயல் - ஒன்பது

# ஒழுக்கவியல்

# 9. ஒழுக்கவியல்

மனிதனின் வாழ்க்கையில் குழந்தைப் பருவத்திலிருந்து தாய் ஒழுக்கத்தைக் கற்றுத் தருகிறாள். அவன் வளர்ந்து நடமாடும் பருவத்தில் தந்தை ஒழுக்க நிலையினை உணரவைக்கின்றார். இதற்கு மேலும் அவன் தன் சொந்த சிந்தனையில் சிந்திக்கும் தருணத்தை அடைந்த பிறகு சுயகட்டுப்பாடும் இறையச்சத்தினையும் தம் மனதில் நிறுத்தி வாழ்க்கையின் இறுதிவரை வாழக்கூடிய காலங்களை ஒழுக்கத்தின் அடிப்படையில் வாழ்வானாயின் அவனே சிறந்த மனிதன் ஆவான். ஒவ்வொரு தனிமனிதனும் ஒழுக்கத்தோடு வாழ்வானாயின் அங்கு எவ்விதப் பிரச்சனையும் எழாது. அவர்கள் வாழும் சமுதாயம் அமைதியானதாக விளங்கும். திருக்குர்ஆனும் நபிமொழியும் இயம்பும் ஒழுக்கம் சார்ந்த செய்திகளை இவ்இயல் பகர்கிறது.

**மனிதனும் ஒழுக்கமும்**

இஸ்லாம் மொழியும் ஒழுக்கநெறியானது மனித குலம் முழுமைக்கும் பயன்தர வல்லது. இதனை, “மனிதகுலம் முழுமைக்கும் பொருந்தக் கூடிய சர்வதேச அடிப்படை உரிமைகளை இஸ்லாம் விதித்துள்ளது. இவை எல்லாக் காலத்திலும் எல்லாச் சூழ்நிலையிலும் மதிக்கப்பட்டுப் பேணப்பட வேண்டியவை. இந்த உரிமைகளைச் சாதிப்பதற்குச் சட்ட பாதுகாப்பை மட்டும் இஸ்லாம் அளிக்கவில்லை. வலுவான ஒழுக்க வாழ்வமைப்பையும் வழங்கியுள்ளது. தனிநபர் வாழ்வுக்கும் சமுதாய நலத்திற்கும் அது வழிகோலும்.

அனைத்துச் செயல்களும் இஸ்லாத்தில் அறமாகக் கருதப்படுகிறது. தனிநபர் மற்றும் சமூகநலத்திற்கு ஊறுவிளைவிப்பவை ஒழுக்கக் கேடாகக் கொள்ளப்படுகிறது. இஸ்லாத்தில் இறையன்பும், மனித நேயமும் மிக முக்கியமாகக் கருதப்படுவதால், வெற்றுச் சடங்குகளுக்கு இங்கு வேலையேயில்லை[1] என்கிறது இஸ்லாத்தை தெரிந்து கொள்ளுங்கள் என்னும் நூல். திருமறையில் இறைவன்,

> நற்செயல் என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல! மாறாக அல்லாஹ்வையும், இறுதி

> நாளையும் வானவர்களையும் வேதங்களையும் நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும் மேலும் (அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாகத்) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும் வறியவர்களுக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும். மேலும் தொழுகையை நிலைநாட்டி ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயலாகும். மேலும் வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறை வேற்றுபவர்களும், வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் நடக்கும் போரட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவார்! இவர்களே உண்மையாளர்கள்! மேலும் இவர்களே இறையச்சமுடையவர்கள் (2:177)

நேர்மை, இறையச்சம் ஆகியவற்றிற்கு விளக்கம் அளிக்கும் வகையில் மேற்சுட்டிய வசனம் அமைந்துள்ளது. இதில் வணக்க வழிபாட்டு விதிகளை மனிதன் கடைபிடிக்க வேண்டும், இறையன்பு மற்றும் மனித அன்பில் கருத்தூன்றிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பன வற்புறுத்தப்பட்டுள்ளன. மேலும் மனிதன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டியவனவாகப் பின்வருவனவற்றைச் சுட்டுவர். அவை:

- நமது நம்பிக்கை வாய்மையானதாகவும், உளமார்ந்ததாகவும் இருக்கவேண்டும்.
- பிற மக்களுக்கு உதவி புரிதல் மூலமாக நமது நம்பிக்கை வெளிப்பட வேண்டும்.
- சமூகநல மன்றங்களை ஆதரிக்கும் நல்ல குடிமகனாக விளக்க வேண்டும்.
- எந்தச் சூழலிலும் நேரிய பாதையிலிருந்து அசைக்க முடியாத திடமான உள்ளத்தை நாம் பெற்றிருக்க வேண்டும்

என்பனவாகும். இந்தக்கருத்துகளை மனதில் பதிவு செய்து கொண்டு நன்மையானவற்றையும் தீமையானவற்றையும் அறிந்து கொள்ள முயல

வேண்டும். முழு ஒழுக்க மாண்புகளும் இந்த மைய நிலையிலேயே சுழல வேண்டும். ஒழுக்க விதிகளை வலியுறுத்தும் முன்னர் இஸ்லாம் ஒன்றைத் தெளிவாக மனித உள்ளத்தில் விதைக்க விரும்புகிறது. இறைவன் எப்பொழுதும் எல்லா இடத்திலும் மனிதனைப் பார்க்கக் கூடியவனாக இருக்கிறான். உலகத்தாரின் பார்வையை மனிதன் ஏமாற்றலாம். ஆனால், இறைவனை ஏமாற்ற இயலாது. உலகத்தாரின் அரசின் தண்டனையிலிருந்து தப்பலாம். ஆனால், இறைவனின் பிடியிலிருந்து தப்ப முடியாது. இறைதிருப்தியை இறை மகிழ்ச்சியைப் பெறுவதே மனிதனின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என இஸ்லாம் அறிவுறுத்துகிறது. இவ்வாறு அறச்செயலுக்கான மிக உயர்ந்த ஒருநிலையை துல்லியமான அளவுகோலை வழங்கியுள்ளது. மானிட ஒழுக்கப் பரிணாம வளர்ச்சிக்கு இது எண்ணற்ற வாயில்களைத் திறக்கவைக்கிறது. ஞானத்திற்கு அடிப்படை ஆதாரமாக இறைவாக்கு (வேதவெளிப்பாடு) கொள்ளப்படுகிறது. இதனால் ஒழுக்கத்துக்கான நீடித்த நிலைத்த அளவுகோல் நிர்ணயிக்கப்படுகிறது.

இங்கே நியாயமான விட்டுக் கொடுத்தல்களும் ஒருவரையொருவர் சார்ந்திருத்தலும், சமூகப்புதுமை மாற்றங்களும் அனுமதிக்கப்படும். தான்தோன்றித்தனம் ஏற்றத்தாழ்வுகள், மூர்க்கத்தனமான போக்குகள் இங்கு இருக்காது. இறையச்சம் இறையன்பு இவையே ஒழுக்க மாண்புகளைச் செயல்படுத்தும் உந்து சக்திகளாய் விளங்குமே தவிர கட்டுப்பாடோ, கட்டுக்காவலோ நிர்பந்தங்களோ அல்ல.

இறைநம்பிக்கை மற்றும் தீர்ப்பு நாளைப் பற்றிய நம்பிக்கையை வலியுறுத்துவதன் வாயிலாக ஒழுக்க நடவடிக்கைகளை உளப்பூர்வமாக மனிதன் மேற்கொள்ளும் ஆற்றலை இஸ்லாம் வழங்கிவிடுகிறது. இதனால் உள்ளமும் ஆத்மாவும் ஐக்கியப்பட்டு நல்ல பண்புகளுக்கு அர்ப்பணமாகிறது. நன்கு அறியப்பட்ட ஒழுக்க நியதிகளின் முக்கியத்துவத்தை இஸ்லாம் குறைத்து மதிப்பிடவில்லை, நவீன அறப்போதனையும் கூறிவிடவில்லை. தவறான மூலத்தையும் தந்திடவில்லை. புதுமாறுதலையும் அளிக்கவில்லை, காரணமின்றிச் சிலவற்றை அளவுக்கதிகமாகக் கவனத்தில் கொள்வதும் வேறு பலவற்றை அறவே நிராகரிக்கும் போக்கும் இஸ்லாத்தில் இல்லை. நடுநிலையோடு சம நிலையோடு பொதுவாக உலகில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒழுக்கப்பண்புகளைக்

கூடுதல் குறைவின்றி இஸ்லாம் ஏற்றுக்கொள்கிறது. முழு அளவிலான வாழ்க்கைத் திட்டத்தில் ஒவ்வொரு ஒழுக்கப் பண்பிற்கும், சமச்சீரான அளவில் அதற்குரிய தகுந்த இடத்தை இஸ்லாம் அளிக்கிறது. தனிநபரின் ஆளுமையை விரிவாக்கிக் குடும்பம், சட்டம், கல்வி, சமூக எல்லைகளில் சமுதாயத்துடன் உறவுகளை வலுவடையச் செய்கிறது. கருவரையிலிருந்து மண்ணறை வரை இத்தொடர்பும் சம்மந்தமும் நீடிக்கிறது. சமையற் கட்டிலிருந்து உறங்கும் கட்டில் வரையிலும் உணவரையிலிருந்து போர்க்களம் வரையிலும் ஆக வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் இஸ்லாம் ஒழுக்க மாண்பினை வலியுறுத்துகிறது. தனிவாழ்வு, பொதுவாழ்வு எதுவுமே இதிலிருந்து தப்புவதில்லை. வாழ்க்கையை ஒரே கூறாக இஸ்லாம் பார்ப்பதால் அனைத்து நிலையிலும் அறப்போதனைகள் ஏற்கப்படவேண்டும் என்று அது வலியுறுத்துகிறது. தனிநபர் தேவைகள், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு குறுகிய தன்னல எல்லைகளையெல்லாம் கடந்து ஒழுக்க மாண்புகள் வாழ்வியல் பற்றுக்கோடாக ஆதிக்கச் சக்தியாக மலர்ந்து நிற்க இஸ்லாம் நாட்டம் கொள்கிறது.

அனைத்து விதமான தீமைகளிலிருந்து பாதுகாப்பளித்து ஒட்டு மொத்தமான நல்லவைகளின் தொகுப்பை வாழ்வில் திட்டமாக இஸ்லாம் மனிதர்கள் முன் சமர்பிக்கிறது. அறவுரைகளைப் பரப்புவதோடு நின்று விடாமல் தீமைகளையும் தடுத்து நிறுத்த வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. நன்மைகள் பரவவேண்டும். அதே நேரத்தில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் நன்மையை ஏவுதலும் தீமையைத் தடுத்தலும் ஏககாலத்தில் செய்தாக வேண்டும்.

மனச்சான்று உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். அவர்களுக்குதான் “முஸ்லீம்” என்று பெயர். இந்தச் சமுதாய உருவாக்கத்திற்கு மூல நோக்கம் இதுதான். நல்லவைகளை வலியுறுத்தித் தீமைகளை அடக்கியாள அமைப்பு ரீதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு முஸ்லிமுடைய வாழ்வில் பல்வேறு கோணங்களை எடுத்துரைக்கும் இஸ்லாமிய அடிப்படை ஒழுக்க அறிவுரைகளைப் பார்க்கும் போது ஒரு முஸ்லிமின் ஒழுக்கமான தனிவாழ்வு மற்றும் சமூகப் பொறுப்புகளைப் பரந்த அளவில் உள்ளடக்கியதாக அவை அமைந்துள்ளன என்பது தெளிவாகும்.

**திருமறை கூறும் ஒழுக்க மாண்பு**

ஒரு இஸ்லாமியரின் மிக உச்சகட்ட பண்பு இறைநம்பிக்கையே என்று குர்ஆன் கூறுகிறது.

> உங்களில் யார் மிகவும் இறையச்சமுடையவராக இருக்கின்றாரோ அவரே அல்லாஹ்விடத்தில் மிக கண்ணியவான் (49:13)

இரக்கச் சிந்தனை, அடக்கம், ஆடைகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்துதல், வாய்மை, ஒழுங்கு, பொறுமை, நிலைகுலையாமை, நேர்மை, ஒப்பந்தத்தை நிறுவேற்றுதல் ஆகிய நற்குணங்களை ஒழுக்கப் பண்புகளாக மீண்டும் மீண்டும் குர்ஆன் வலியுறுத்துகிறது.

> நிலைகுலையாத பொறுமையாளர்களையே இறைவன் நேசிக்கின்றான் (3:146)

> அவர்கள் வசதியுள்ள நிலையிலும் வசதியற்ற நிலையிலும் செலவழிப்பார்கள் சினத்தை அடக்கிக் கொள்வார்கள் மேலும் மக்கள் மன்னிப்பார்கள் இத்தகைய உயர்பண்பினரை இறைவன் நேசிக்கிறான் (3:133-134)

> தொழுகையை நிலைநிறுத்துங்கள், நல்லவற்றை ஏவுங்கள், தீமைகளை விலக்குங்கள், சிரமங்களைச் சகித்துக் கொள்ளுங்கள், செயல்களில் இது சத்திய நிலைப்பாடாகும். மனிதர்களை விட்டு முகத்தை (பெருமை கொண்டு) திருப்பிக்கொள்ளாதீர்கள். பூமியில் பெருமையுடன் நடக்காதீர்கள், கர்வம், பெருமை, கொள்வோரை இறைவன் நேசிப்பதில்லை. நடத்தையில் நடுநிலையை விரும்புங்கள் குரலையும் தாழ்த்திக் கொள்ளுங்கள் நிச்சயமாகக் குரல்களிலெல்லாம் மிக அருவெருக்கத்தக்கது கழுதையின் குரலே (31:18-19)

என வரும் இறை வசனங்கள் ஒரு மனிதன் எங்ஙனம் ஒழுக்கத்துடன் வாழவேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றன. மேலும் ஒழுக்க நியதிகளைப் பற்றி நபி (ஸல்) அவர்கள்,

"என்னுடைய இறைவன் எனக்கு ஒன்பது கட்டளைகள் பிறப்பித்துள்ளான். நான் தனிமையிலும் (மற்றவர்களுடன்) சேர்ந்திருக்கும் போதும் இறைவனை நினைக்க வேண்டும், கோபத்திலும் மகிழ்ச்சியிலும் நீதனமாகப் பேச வேண்டும், வறுமையிலும் வளத்திலும் நடுநிலையைக் கடைப்பிடிக்க வேண்டும். என்னுடன் யார் நட்புறவைத் துண்டித்தார்களோ அவர்களுடன் நான் நட்புறவு கொள்ளவேண்டும். எனக்குத்தந்துதவ மறுத்தவர்களுக்கு நான் கொடுத்து உதவ வேண்டும். எவற்றை பற்றி நான் உங்களிடம் ஏவாமல் விட்டு விட்டேனோ அவை பழிப்புக்குரியவை, மேலும் எவற்றை நான் உங்களுக்கு ஏவினேனோ அவை மிக்க நல்லவை" என்பதாய் மொழிகிறார்கள். இதன் வழியும் ஒழுக்க மாண்புடன் மனிதன் வாழ வேண்டும் என்பது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**பெற்றோருடன் ஒழுக்கநிலை**

பெற்றோருக்குப் பணிவிடை செய்வது மதிப்பளிப்பது குறித்து இஸ்லாம் மிக அதிகமாகவே எடுத்துக்கூறுகிறது. இறைநம்பிக்கையில் ஒரு பகுதியாகவும் இது கொள்ளப்படுகிறது. பெற்றோரைப் பற்றித் திருமறையில்,

> உமதிறைவன் தன்னைத்தவிர (மற்றொருவரையும்) வணங்கக் கூடாதென்றும் தாய், தந்தைக்கு நன்றி செலுத்தும் படியும் கட்டளையிட்டிருக்கிறான். அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்து விட்டபோதிலும் உம்மிடமிருந்து அவர்களை வெருட்டவும் வேண்டாம், அவர்களை நிந்திக்கவும் வேண்டாம். அவர்களிடம் பணிந்து நடப்பீராக! அன்றி இறைவா! நான் குழந்தையாயிருந்த போது என்னை அவர்கள் வளர்த்து ஆதரித்த வண்ணமே நீயும் அவ்விருவர் மீதும், அன்பும் அருளும் புரிவாயாக! என்றும் நீர் பிரார்த்திப்பீராக! (17:23-24)

எனவரும் இறைவசனம் உரைக்கிறது.

**அண்டைவீட்டாருடன்**

அண்டை வீட்டாருடன் இணக்கமாகவும் அன்பாகவும். நட்புணர்வுடனும் பழகவேண்டும். அவர்களுக்கு ஏதேனும் இன்னல் ஏற்பட்டால் பாதுகாப்பு அரணாகச் செயல்பட வேண்டும்.

> அண்டை வீட்டுக்காரர் பசியோடிருக்கும் போது தான் மட்டும் வயிறார உண்பவன் இறைநம்பிக்கையாளன் அல்லன்

> எவருடைய தீய நடத்தையிலிருந்து அண்டைவீட்டார் பாதுகாப்பு பெறவில்லையோ, அவர் இறைநம்பிக்கை கொண்டவராக மாட்டார்

எனவரும் முகம்மது நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கள் இதனைச் சுட்டுகின்றன.

**பிற உறவினர்களுடன்**

இறைவன் தமக்குக் கொடுத்த செல்வத்திலிருந்து பிறருக்குக் கொடுத்துதவுமாறு மனிதர்களிடம்,

> உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அவரவர்களுடைய உரிமைகளைக் கொடுத்து விடவும். அளவு கடந்து உங்கள் செல்வத்தை வீண் செலவு செய்ய வேண்டாம் (17:26)

என இறைவன் கூறுகின்றார். இவ்வசனம் உறவினர்களுக்கு மட்டுமின்றி வசதியற்ற அனைவருக்கும் மதிப்பளித்து வசதி உள்ளவர்கள் அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**சமூகத்தில் உள்ள பொருப்புகள்**

இஸ்லாம் கற்பிக்கும் சமூகக் கடமைகள் கழிவிரக்கம். பிறர் நலம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. சில குறிப்பிட்ட நேரங்களில் பரந்த மனப்பாங்குடன் கூடிய இந்த இறையாணைகள் சிலநேரங்களில் விதிவிலக்காகவும் அமைவதுண்டு பல்வேறு உறவுகளுக்குகிடையே இருக்க வேண்டிய உரிமைகள் பொறுப்புகளை இஸ்லாம் வலியுறுத்தும் அதே நேரத்தில் குறிப்பிட்ட அன்பார்ந்த நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்துகிறது. பரந்து பட்ட மனிதத் தொடர்புகளில் முதலாவது நமது குடும்ப உறுப்பினர்களிடையே அமைய வேண்டியதாகும். தாய், தந்தை, கணவன், மனைவி, குழந்தைகள் பிறகு ஏனைய உறவினர்கள் அண்டை வீட்டார், நண்பர்கள், அறிமுகமானோர், அநாதைகள், விதவைகள், வறியோர், ஏனைய முஸ்லிம்கள், ஏனைய மனிதர்கள், மிருகங்கள் என்று மனித உறவின் வட்டம் விரிவடைந்து செல்கிறது.

திருக்குர்ஆன் மற்றும் முகம்மது நபி (ஸல்) அவர்களின் அறிவுரைகள் அனைத்தும் மனித குலம் தழைத்தோங்கவும், அன்புடனும் பண்புடனும் நடந்துகொள்ள வேண்டும் என்பதாகவும் அமைந்துள்ளன. ஒரு முஸ்லிம் தனது பெற்றோர், உறவினர்கள் அண்டைவீட்டார் ஆகியோரின் உரிமைகளை மட்டும் பேணி நடந்தால் போதாது, மாறாக முழு மனிதகுலம், மிருகங்கள், பயன்தரு மரங்கள், தாவரங்கள் ஆகிய அனைத்துக்கும் உரிய சமூகப் பொறுப்புகளை நிறை வேற்றவேண்டும்.

சான்றாக, விளையாட்டாக மிருகங்களையும் பறவையினங்களையும் வேட்டையாடுவதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. தகுந்த அத்தியாவசிய காரணமின்றிப் பயன்தரும் மரங்களையும் கனிதரும் தாவரங்களையும் வெட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது ஒன்று தெளிவாகிறது. ஒழுக்க மாண்புகளின் அடிப்படையில் இஸ்லாம் நிர்மாணிக்கும் உயர்ந்தபட்ச குணவொழுக்க அமைப்பில் மனிதகுலம் அதன் வலிமையை உணரும். தன்னார்வமாயைகளிலிருந்து ஆத்மாவை இது விடுவிக்கும். கொடுங்கோண்மை, கொடூர, தாறுமாறான, சுயநலம்போக்கை இது தவிர்க்கும். இதுஇறையச்சமுள்ள மனித இனத்தை உருவாக்கும். பொய்மையுடன் ஒத்துப்போகாத கொள்கைக் குன்றுகளை இது உருவாக்கும்.

இச்சமூகத்தில் பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் சுயக்கட்டுபாட்டுடன் திகழும் சமூக நல் விரும்பிகளைத் தோற்றுவிக்கும் அனைத்து உயிர்களின் மீதும் அனைத்துக் காலகட்டத்திலும் இரக்கம், அன்பு, ஈதல், தொண்டுள்ளம், அமைதி, வாய்மை, கொண்டு பழகும் தன்மையை இஸ்லாம் வளர்க்கிறது. எனவே, சிறந்த தூய பண்புகள் செழித்தோங்குவதால் நல்லவைகளையே இச்சமூக அமைப்பில் எங்கும் நீக்கமற காணப்படுகிறது.

முடிவுகள்

❋ மனித குலம் முழுமைக்கும் பொருந்தக்கூடிய ஒழுக்கங்கலாக இறை அன்பும் மனித நேயத்தையும் இஸ்லாம் கூறுகிறது.

❋ இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்தவன் என்பதை இஸ்லாம் உணர்த்துகிறது. மனிதன் மனிதர்களை ஏமாற்றலாம் ஆனால் இறைவனை ஏமாற்ற இயலாது. எனவே மனிதனிடத்தில் இறையச்சமும் இறையன்புமும் மேலோங்கும்போது ஒழுக்கமும் வளரும்.

❋ அன்பு, அடக்கம், இரக்கச் சிந்தனை, ஆடைகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்துதல், வாய்மை, ஒழுங்கு, பொறுமை, நிலைகுலையாமை, நேர்மை, ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் ஆகிய நற்குணங்களைத் திருக்குர்ஆன் ஒழுக்கப் பண்புகளாக வலியுறுத்துகிறது.

❋ ஒரு இஸ்லாமியரின் மிகச்சிறந்த ஒழுக்கப் பண்பு இறை நம்பிக்கையே எனத் திருக்குர்ஆன் இயம்புகிறது.

❋ ‘உங்களில் யார் மிகவும் இறையச்சமுடையவராக இருக்கின்றாரோ அவரே அல்லாஹ் இடத்தில் மிகக் கண்ணியவான்’ என்று இறையச்சமே இஸ்லாத்தின் சிறந்த ஒழுக்கமாகத் திருமறை மொழிகிறது.

## அடிக்குறிப்பு

1. அழைப்பு, வழிகாட்டல்களுக்கான கூட்டுறவுச் செயலகம், இஸ்லாத்தைத் தெரிந்து கொள்ளுங்கள், ப.49